**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05–ஆம் நாள் சனிக்கிழமை**
**அசல் வழக்கு எண் – 312/2017**
**CNR No:TNAL050003952017**

சக்கரபாணி – வாதி

/எதிர்/

1. வைத்திலிங்க முதலியார்,
2. சாமிதுரை, – பிரதிவாதிகள்

வாதி தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு சென்று வரும் பாதையான தாவா வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 2–வது அயிட்ட சொத்தான ABCD பகுதி வாதியின் புழங்குரிமை பாதையாக விளம்புகை செய்து பரிகாரம் வழங்க வேண்டியும், தாவா 2 மற்றும் 3–வது அயிட்ட சொத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ABCD பாதையிலும் ABEFGHA பாதையிலும் வாதிக்குள்ள பாதை பாத்தியத்தை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் ஆக்கிரமிப்பும் செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், மற்றும் இவ்வழக்கின் தன்மைக்கேற்ப சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தம்யுக்தமாய் கருதும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கி வாதிக்கு சாதகமான தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கிட வேண்டி பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 05.08.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும், முதல்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ஜெய்சங்கர் அவர்கள் முன்னிலையாகியும், 2–வது பிரதிவாதி தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வழக்கு தள்ளிவைக்கப்பட்டு மீண்டும் 3.30 மணிக்கு அழைக்கப்பட்டது யாரும் ஆஜரில்லை. இன்று இவ்வழக்கு சிறப்பு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது. இந்நிலையில் வாதியின் வருகை அவசியமாகிறது. வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை. எனவே நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**வாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

**பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**

–இல்லை–

ஒப்பம்/– திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

----------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.312/2017
தீர்ப்புரை (நேரிய/வரைவு)
நாள்: 05.08.2023.

----------------------------